# புகையிலைப் பயிர்ச்செய்கையின் அண்மைக் காலப்போக்கு – யாழ் மாவட்டத்தின் கோண்டாவில் பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**ஜெனார்த்தன், பா., பிரதீபராஜா, நா.**
புவியியற்துறை (திட்டமிடல்) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
Jenaak1995@gmail.com

*யாழ் மாவட்டத்தின் வலிகாம வலயத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள கோண்டாவில் பிரதேசத்தில் புகையிலை விவசாயத்தினை தமது பிரதான வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்ட 67 விவசாயிகளும் 82 கூலித் தொழிலாளர்களும் காணப்படுகின்றனர். 2017 இல் புகையிலை உற்பத்தித் தடை தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் அறிவிப்பானது குறித்த விவசாயிகள் மத்தியில் புகையிலை பயிரிடல் தொடர்பான அச்சத்தினை ஏற்படுத்தியிருந்தது. இருந்தபோதிலும் அவர்கள் புகையிலையினை பயிரிடத் தவறவில்லை. ஆனாலும் 2019 இனைத் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்ட பணவீக்க நிலைமைகளால் குறித்த விவசாயிகள் புகையிலை உற்பத்தியில் பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றனர். அந்த வகையில் குறித்த புகையிலை விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதற்காக ஆய்விற்கான முதல்நிலைத் தரவுகளானவை படையாக்கப்பட்ட எளிய எழுமாற்று மாதிரியெடுப்பின் அடிப்படையில் ஆய்வுடன் தொடர்புடைய புகையிலை விவசாயிகள் மற்றும் கூலித் தொழிலாளிகளில் முறையே 40 வீதமானோரிடமிருந்தும் புகையிலை விநியோகஸ்தர்களிடமிருந்து வசதிமாதிரியெடுப்பின் அடிப்படையிலும் கோண்டாவில் விவசாய சம்மேளனங்களின் தலைவர்கள் மற்றும் நல்லூர் கமநலசேவைகள் நிலைய உத்தியோகத்தர்கள் ஆகியோரிடமிருந்தும் கட்டமைக்கப்பட்ட மற்றும் கட்டமைக்கப் படாத நேர்காணல்கள் ஊடாகப் பெறப்பட்ட அதே வேளை ஆய்வு பிரதேசத்தில் மேற் கொள்ளப்பட்ட கள அவதானம் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டு விபரணப்புள்ளி விபரவியல் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டன. குறித்த புகையிலை விவசாயத்தினுடைய போக்குகளை ஆய்வு செய்வதற்காக இரண்டாம் நிலை தரவுகளானவை உள்ளூர் விவசாய சம்மேளனம் மற்றும் நல்லூர் கமநலசேவைகள் நிலையம் போன்றவற்றி லிருந்து சேகரிக்கப்பட்டு காலரீதியான போக்குப் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு விபரிக்கப் பட்டன. பகுப்பாய்வுகளினடிப்படையில் இலங்கையில் 2019இன் பின்னர் ஏற்பட்ட பணவீக்க நிலைமைகளானவை குறித்த விவசாயிகளின் உற்பத்திச் செலவில் ஏற்படுத்திய தாக்கமானது கோண்டாவில் பிரதேசத்தின் புகையிலை உற்பத்தியை கணிசமான அளவில் வீழ்ச்சி அடைய செய்துள்ளமை புலனாகியது. மின்சாரக்கட்டணம், நிலக்குத்தகை, இரசாயன உரங்களின் விலை, விவசாய நாட்கூலி போன்றவற்றில் ஏற்பட்ட பாரிய அதிகரிப்பானது புகையிலை விவசாயிகளின் வருமானத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியதோடு புகையிலை விவசாயிகளின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. அத்தோடு புகையிலை விவசாயத்தில் தங்கியிருந்த கூலித் தொழிலாளர்களையும் பாதிப்படையச் செய்தது. இவ்வாய்வில் புகையிலை விவசாயிகளுக்கேயான பிரதான பிரச்சனையாக புகையிலை உற்பத்தியாளர்கள், புகையிலை விநியோகஸ்தர்கள் மற்றும் புகையிலை*